பிரசார் பாரதி

அகில இந்திய வானொலி, சென்னை - 4

**20 02 2026** **7 15**

வெள்ளிக்கிழமை காலை

<u>தலைப்புச் செய்திகள்</u>

1. எஸ்டோனியா, ஸ்லோவாக்கியா மற்றும் செர்பியா நாடுகளின் அதிபர்கள் குடியரசுத்தலைவர் திருமதி திரௌபதி முர்மு-வைச் சந்தித்து பேச்சு நடத்தினர்.

2. இலங்கை, மொரீஷியஸ் உள்ளிட்ட நாடுகளின் தலைவர்களுடன் இருதரப்பு உறவுகள் குறித்து பிரதமர் திரு நரேந்திர மோடி இன்று பேச்சு நடத்துகிறார்.

3. எல்லைப் பகுதி கிராமங்கள் மேம்பாட்டுக்கான திட்டத்தின் இரண்டாம் கட்டத்தை மத்திய உள்துறை அமைச்சர் திரு. அமித் ஷா அசாமில் இன்று தொடங்கி வைக்கிறார்.

4. ரஃபேல் போர் விமானங்கள் தொடர்பாக இந்தியாவும் பிரான்சும் இருதரப்பு ஒத்துழைப்பை அதிகரிக்க முடிவு செய்துள்ளதாக பிரான்ஸ் அதிபர் திரு. இம்மானுவேல் மேக்ரோன் தெரிவித்துள்ளார்.

5. காஸா மறு சீரமைப்புப் பணிகளுக்காக அமெரிக்கா மற்றும் அமைதிக் குழு நாடுகள் சார்பில் 7 பில்லியன் டாலர் நிதி உதவி வழங்கப்படும் என்று அமெரிக்க அதிபர் திரு. டோனல்ட் டிரம்ப் அறிவித்துள்ளார்.

--- இனி விரிவான செய்திகள் ---

<<<<>>>>

எஸ்டோனியா, ஸ்லோவாக்கியா மற்றும் செர்பியா அதிபர்கள் குடியரசுத்தலைவர் திருமதி திரௌபதி முர்மு-வைச் சந்தித்து பேச்சு நடத்தினர்.

எஸ்டோனியா அதிபர் திரு. அலார் காரிஸ் உடனான சந்திப்பின்போது டிஜிட்டல் துறையில் இந்தியாவும் - எஸ்டோனியாவும் ஆக்கப்பூர்வமான ஒத்துழைப்பை கொண்டுள்ளது மகிழ்ச்சியளிப்பதாக குடியரசுத்தலைவர் தெரிவித்தார்.

இந்திய - ஐரோப்பிய யூனியன் பொருளாதார ஒப்பந்தத்திற்கு ஆதரவு அளித்ததற்காக எஸ்டோனியாவிற்கு அவர் நன்றி தெரிவித்தார்.

ஸ்லோவேக்கியா அதிபர் திரு. பெல்லகிரினி, குடியரசுத்தலைவரை சந்தித்துப் பேசினார்.

அப்போது வர்த்தகம், முதலீடு, அறிவியல் மற்றும் தொழில்நுட்பம், பாதுகாப்பு உள்ளிட்ட துறைகளில் கடந்த சில ஆண்டுகளாக இரு நாடுகளுக்கும் இடையே ஒத்துழைப்பு வலுவடைந்து வருவது மகிழ்ச்சியளிப்பதாக குடியரசுத்தலைவர் தெரிவித்தார்.

செர்பியா அதிபர் திரு. அலெக்சாண்டாடர் யூகிக் உடனான சந்திப்பின்போது பேசிய திருமதி திரௌபதி முர்மு, செயற்கை நுண்ணறிவில் இரு நாடுகளும் ஒத்துழைப்பை மேம்படுத்த அதிக வாய்ப்புகள் உள்ளதாக கூறினார்.

விவசாயம், உயிரி தொழில்நுட்பம், மருந்து உள்ளிட்ட துறைகளிலும் அதிக வாய்ப்புகள் உள்ளதாக அவர் தெரிவித்தார்.

புதுதில்லியில் நடைபெற்று வரும் செயற்கை நுண்ணறிவு உச்சிமாநாட்டில் பங்கேற்க, இந்தியா வந்துள்ள பல்வேறு நாடுகளின் தலைவர்களுடன் பிரதமர் திரு. நரேந்திர மோடி இன்று பேச்சு நடத்துகிறார்.

இலங்கை அதிபர் திரு. அநுர குமார திசநாயக, மொரீஷியஸ் பிரதமர் திரு. **Naveen Chandra Ramkoolam,** ஸ்லோவேக்கிய அதிபர் திரு. **Peter Pellegrani** ஆகியோருடன் பிரதமர் இருதரப்பு பேச்சுவார்த்தைகள் நடத்த உள்ளார்.

ஐ.நா. பொதுச்செயலாளர் திரு. ஆண்டனியோ குட்டரெஸ் உடனும் பிரதமர் ஆலோசனை நடத்த உள்ளதாக எமது செய்தியாளர் தெரிவிக்கிறார்.

<<<<>>>>

புதுதில்லியில் நடைபெற்று வரும் இந்திய செயற்கை நுண்ணறிவு மாநாடு 5வது நாளாக இன்றும் நடைபெற உள்ளது.

இதில் தலைவர்களின் பிரகடனம் ஏற்றுக்கொள்ளப்பட உள்ளது.

இது கூட்டு செயல்பாடுகளை உறுதிப்படுத்துவதுடன், உலகளாவிய செயற்கை நுண்ணறிவு நிர்வாகம் மற்றும் ஒருங்கிணைந்த செயல்திட்டத்தை எடுத்துரைக்கும் வகையில் அமையும்.

இன்று நடைபெற உள்ள உயர்நிலைக் கூட்டத்தில் பல்நோக்கு ஒத்துழைப்பை வலுப்படுத்துவது குறித்து ஆலோசனைகள் மேற்கொள்ளப்படும்.

இன்றைய நிகழ்வில் பல்வேறு அமர்வுகளில் திரு. அஷ்வினி வைஷ்ணவ் உள்ளிட்ட மத்திய அமைச்சர்களும், ஆந்திர முதலமைச்சர் திரு. சந்திரபாபு நாயுடு, மத்தியப்பிரதேச முதலமைச்சர் திரு. மோகன் யாதவ், மகாராஷ்டிர முதலமைச்சர் திரு. தேவேந்திர ஃபட்னவிஸ் உள்ளிட்டோர் பங்கேற்கின்றனர்.

கண்காட்சியாளர்கள், புதுமைக் கண்டுபிடிப்பாளர்கள் மற்றும் பார்வையாளர்களிடமிருந்து அமோக வரவேற்பு கிடைத்துள்ளதைத் தொடர்ந்து செயற்கை நுண்ணறிவு தொடர்பான கண்காட்சி ஒரு நாள்

நீட்டிக்கப்படுவதாகவும், இந்த கண்காட்சி நாளை இரவு 8 மணி வரை நடைபெறும் என்றும் அறிவிக்கப்பட்டுள்ளது.

எல்லைப் பகுதி கிராமங்கள் மேம்பாட்டுக்கான திட்டத்தின் இரண்டாம் கட்டத்தை மத்திய உள்துறை அமைச்சர் திரு அமித் ஷா அசாமில் இன்று தொடங்கி வைக்கிறார்.

இந்தத் திட்டம் கச்சார் மாவட்டத்தில் உள்ள நாதன்பூர் கிராமத்தில் தொடங்கப்படுகிறது.

இத்திட்டத்தின் இரண்டாம் கட்டம், எல்லைப் பகுதியில் உள்ள கிராமங்களின் விரிவான, நிலையான வளர்ச்சியை உறுதி செய்வதற்காக வடிவமைக்கப்பட்டுள்ளது.

உள்கட்டமைப்பை மேம்படுத்துதல், அடிப்படை சேவைகளை வலுப்படுத்துதல், நிலையான வாழ்வாதார வாய்ப்புகளை உருவாக்குதல் ஆகியவற்றில் இத்திட்டம் அதிக கவனம் செலுத்தும் என்று மத்திய அரசு தெரிவித்துள்ளது.

அடுத்த மூன்று ஆண்டுகளுக்கு 6 ஆயிரத்து 839 கோடி செலவில் இத்திட்டம், 15 மாநிலங்கள் மற்றும் 2 யூனியன்பிரதேசங்களில் செயல்படுத்தப்படும் என்று அரசு கூறியுள்ளது.

உலக சமூக நீதி தினம் இன்று கொண்டாடப்படுகிறது.

அனைவரையும் உள்ளடக்கிய சமூகத்தை உருவாக்கவும் சமமான வாய்ப்புகளை உறுதி செய்யும் நோக்கிலும், 2009-ம் ஆண்டு முதல் ஒவ்வொரு ஆண்டும் பிப்ரவரி 20-ம் தேதி உலக சமூக நீதி தினம் கொண்டாடப்பட்டு வருகிறது.

இதனையொட்டி நாடு முழுவதும் பல்வேறு நிகழ்ச்சிகளுக்கு ஏற்பாடு செய்யப்பட்டுள்ளது.

புதுதில்லியில் சமூக நீதி மற்றும் அதிகாரமளித்தல் அமைச்சகம், தேசிய சட்டப் பல்கலைக்கழகத்துடன் இணைந்து நடத்தும் நிகழ்ச்சியில் மத்திய சமூக நீதி மற்றும் அதிகாரமளித்தல் துறை இணையமைச்சர் திரு பி.எல். வர்மா பங்கேற்கிறார்.

<<<<>>>>

சூரிய மின்சக்தி, முக்கிய கனிமங்கள் உள்ளிட்ட துறைகளில் இந்தியாவும் - பொலிவியாவும் இருதரப்பு ஒத்துழைப்பை மேம்படுத்த முடிவு செய்துள்ளன.

இந்தியா வந்துள்ள பொலிவிய துணை அதிபர் திரு. எட்மண்ட் லாரா, நேற்று குடியரசு துணைத்தலைவர் திரு. சி.பி. ராதாகிருஷ்ணனை

சந்தித்துப் பேசினார்.

இது தொடர்பாக பொலிவியாவின் துணை அதிபர் சமூக வலைதளத்தில் வெளியிட்டுள்ள பதிவில், டிஜிட்டல்மயமாக்கல், மருத்துவம், உயர்கல்வி உள்ளிட்ட துறைகளில் இருதரப்பு ஒத்துழைப்பை மேம்படுத்த அதிக வாய்ப்புள்ளதாக தெரிவித்துள்ளார்.

அண்மைக் காலமாக இரு நாடுகளுக்கும் இடையே அதிகரித்து வரும் நல்லுறவு குறித்து அவர் மகிழ்ச்சியை வெளிப்படுத்தியுள்ளார்.

<<<<>>>>

உலகளாவிய உணவுப் பாதுகாப்பில் இந்தியா வலுவான நிலையில் உள்ளதாக மத்திய வர்த்தக அமைச்சர் திரு. பியூஷ் கோயல் கூறியுள்ளார்.

ஹரியானாவில் இருந்து மடகாஸ்கருக்கு 7 ஆயிரம் டன் செறிவூட்டப்பட்ட அரிசி ஏற்றுமதி செய்யப்பட்டதற்கு அவர் மகிழ்ச்சி தெரிவித்துள்ளார்.

இது தொடர்பாக சமூக வலைதளத்தில் பதிவிட்டுள்ள அவர், வேளாண் மற்றும் பதப்படுத்தப்பட்ட உணவுப் பொருட்கள் ஏற்றுமதி ஆணையத்தின் மூலம் இந்த அரிசி ஏற்றுமதி செய்யப்பட்டதாக கூறியுள்ளார்.

இது இந்தியாவின் தானியங்கள் ஏற்றுமதி திறன் மற்றும் தற்சார்புக்கு எடுத்துக்காட்டாகத் திகழ்கிறது என்று அவர் கூறியுள்ளார்.

விவசாயிகளின் வருமானத்தை அதிகரிக்க தொடர்ந்து பல்வேறு ஏற்றுமதி நடவடிக்கைகள் மேற்கொள்ளப்படும் என்று திரு. பியூஷ் கோயல் தெரிவித்துள்ளார்.

<<<<>>>>

வாக்காளர் பட்டியல் சிறப்பு தீவிர திருத்தம் தொடர்பான ஆயத்த பணிகளை விரைந்து நிறைவு செய்யுமாறு 22 மாநிலங்கள் மற்றும் யூனியன்பிரதேசங்களின் தலைமை தேர்தல் அதிகாரிகளுக்கு தேர்தல் ஆணையம் உத்தரவிட்டுள்ளது.

இந்த ஆண்டு ஏப்ரல் முதல் இந்த மாநிலங்கள் மற்றும் யூனியன் பிரதேசங்களில் தீவிர திருத்ததத்தைத் தொடங்கத் திட்டமிட்டுள்ளதாக அந்த ஆணையம் கூறியுள்ளது.

முதல் கட்டமாக பீகாரில் ஏற்கெனவே வாக்காளர் பட்டியல் தீவிர திருத்தப் பணி மேற்கொள்ளப்பட்டது.

அதைத் தொடர்ந்து தமிழகம் உட்பட 12 மாநிலங்கள் மற்றும் யூனியன்பிரதேசங்களில் வாக்காளர் பட்டியல் தீவிர திருத்தப் பணி நடைபெற்று வருவதாக ஆணையம் தெரிவித்துள்ளது.

<<<<>>>>

ரஃபேல் போர் விமானங்கள் தொடர்பாக இந்தியாவும் பிரான்சும் இருதரப்பு ஒத்துழைப்பை அதிகரிக்க முடிவு செய்துள்ளதாக பிரான்ஸ் அதிபர் திரு இம்மானுவேல் மேக்ரோன் தெரிவித்துள்ளார்.

புதுதில்லியில் இந்திய செயற்கை நுண்ணறிவு உச்சிமாநாட்டிற்கு இடையே செய்தியாளர்களிடம் பேசிய அவர், கடந்த சில நாட்களுக்கு முன்பு 114 ரஃபேல் விமானங்களை வாங்குவது தொடர்பான முடிவு மேற்கொள்ளப்பட்டதை குறிப்பிட்டார்.

உற்பத்திக்கான இந்தியா திட்டத்தின் கீழ் இந்தியாவுடன் இணைந்து இது கூட்டுத் தயாரிப்பாக உருவாக்கப்படும் என்று அவர் கூறினார்.

இதில் இந்தியா முக்கிய பங்கு வகிக்கும் என்றும் அவர் தெரிவித்தார்.

இந்தியாவும் பிரான்சும் தனித்துவமான உத்திசார் ஒத்துழைப்புடன் செயல்படுவதாக திரு. மேக்ரோன் தெரிவித்தார்.

<<<<>>>>

தில்லியில் மேலும் 25 அடல் உணவகங்கள் திறக்கப்பட்டுள்ளன.

நகரின் பல்வேறு இடங்களில் இந்த உணவகங்களை தில்லி அமைச்சர்கள் திறந்து வைத்தனர்.

லால்பாக் பகுதியில் அடல் உணவகத்தைத் திறந்து வைத்துப் பேசிய தில்லி சுற்றுச்சூழல்துறை அமைச்சர் திரு. மஞ்சிந்தர் சிங் சிர்சாவால், எந்தவொரு தனிநபரும் பசியால் வாடக்கூடாது என்ற பிரதமர் திரு. நரேந்திர மோடி மற்றும் தில்லி முதலமைச்சர் திருமதி ரேகா குப்தாவின் உறுதிப்பாட்டிற்கு இணங்க இந்த உணவகங்கள் திறக்கப்பட்டுள்ளதாகக் கூறினார்.

இதையடுத்து தில்லியில் அடல் உணவகங்களின் மொத்த எண்ணிக்கை 71ஆக உயர்ந்துள்ளதாகவும் அவர் தெரிவித்தார்.

இந்த உணவகங்களில் 5 ரூபாய்க்கு உணவு வழங்கப்படுவதாக அவர் கூறினார்.

<<<<>>>>

காஸா மறு சீரமைப்புப் பணிகளுக்காக அமெரிக்கா மற்றும் அமைதிக் குழு நாடுகள் சார்பில் 7 பில்லியன் டாலர் நிதி உதவி வழங்கப்படும் என்று அமெரிக்க அதிபர் திரு டொனால்ட் டிரம்ப் அறிவித்துள்ளார்.

வாஷிங்டனில் நடைபெற்ற முதல் அமைதிக் குழுக் கூட்டத்தில் இதற்கான முடிவு மேற்கொள்ளப்பட்டது.

கூட்டத்தில் உரையாற்றிய திரு டொனால்ட் டிரம்ப், அமெரிக்கா கூடுதல் உதவிகளை வழங்கும் என்று கூறினார்.

போர் நிறுத்தத்திற்குப் பிறகு, அமெரிக்காவும் அதன் நட்ரபு நாடுகளும் காசாவிற்கு ஏராளமான மனிதாபிமான உதவிகளை வழங்கியுள்ளதாகக் கூறினார்.

கடந்த ஆண்டு நவம்பரில் ஐநா பாதுகாப்பு கவுன்சில் அமைதி வாரியக் குழுவை ஒருமனதாக அங்கீகரித்ததாகவும், இந்த புதிய அமைப்புக்கு வரவேற்பு அதிகரித்துள்ளதாகவும் அவர் தெரிவித்தார்.

காசாவில் நிறுத்தப்படவுள்ள சர்வதேச படைக்கு 5 நாடுகள் வீரர்களை அனுப்பும் என்று அவர் கூறினார்.

காசா காவல்துறைக்கு பயிற்சி அளிக்கும் பணியை எகிப்து மற்றும் ஜோர்டான் ஏற்றுக் கொண்டுள்ளதாக திரு டொனால்டு டிரம்ப் தெரிவித்தார்.

<<<<>>>>

தில்லியில் நடைபெற்று வரும் சர்வதேச சேலஞ்சர் டென்னிஸ் போட்டியில் இந்தியாவின் கலியந்தா பூனச்சா - தாய்லாந்தின் **Truchya Isaro** இணை காலிறுதிக்கு முன்னேறியுள்ளது.

நேற்று நடைபெற்ற ஆடவர் இரட்டையர் பிரிவில் இந்த அணி, இந்தியாவின் பிரஜ்வல் தேவ் - நிதின் குமார் சின்ஹா இணையை **6-2, 6-1** என்ற செட் கணக்கில் வென்றது.

**--------------**

ரஞ்சி கோப்பை கிரிக்கெட் போட்டியில் கர்நாடக அணி இறுதிப் போட்டிக்கு முன்னேறியுள்ளது.

நேற்று நடைபெற்ற அரையிறுதி ஆட்டத்தில் உத்தராகண்ட் அணியை வீழ்த்தி கர்நாடக அணி இறுதிப் போட்டிக்குள் நுழைந்தது.

**<<<<The End>>>>**